ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_{2}$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_{3}$ந்தாசார்யவர்யோ மே ஸந்நிதா$_{4}$த்தாம் ஸதா$_{3}$ ஹ்ரு’தி$_{3}$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ குரவையாய்ச்சியர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ குரவையாய்ச்சியர் ॥

கண்ணனது அவதாரச் செயல்களைப் பேசப் பெற்றமைக்குக் களித்தல்

‡குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும்⋆ குன்றம் ஒன்றேந்தியதும்⋆
உரவு நீர்ப் பொய்கை நாகம் காய்ந்ததும்⋆ உட்பட மற்றும் பல⋆
அரவிற்பள்ளிப் பிரான் தன்⋆ மாய வினைகளையே அலற்றி⋆
இரவும் நன் பகலும் தவிர்கிலம்⋆ என்ன குறை எனக்கே (1)

கேயத் தீங்குழல் ஊதிற்றும் நிரை மேய்த்ததும்⋆ கெண்டை ஒண் கண்⋆
வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும்⋆ மற்றும் பல⋆
மாயக் கோலப் பிரான் தன்⋆ செய்கை நினைந்து மனம் குழைந்து⋆
நேயத்தோடு கழிந்த போது⋆ எனக்கெவ்வுலகம் நிகரே (2)

நிகரில் மல்லரைச் செற்றதும்⋆ நிரை மேய்த்ததும் நீள் நெடுங்கைச்⋆
சிகர மா களிறட்டதும்⋆ இவை போல்வனவும் பிறவும்⋆
புகர் கொள் சோதிப் பிரான் தன்⋆ செய்கை நினைந்து புலம்பி⋆ என்றும்
நுகர வைகல் வைகப்பெற்றேன்⋆ எனக்கென் இனி நோவதுவே (3)

நோவ ஆய்ச்சி உரலோடார்க்க⋆ இரங்கிற்றும் வஞ்சப் பெண்ணை⋆
சாவப் பாலுண்டதும்⋆ ஊர் சகடம் இறச் சாடியதும்⋆
தேவக் கோல பிரான் தன்⋆ செய்கை நினைந்து மனம் குழைந்து⋆
மேவக் காலங்கள் கூடினேன்⋆ எனக்கென் இனி வேண்டுவதே (4)

வேண்டித் தேவரிரக்க வந்து பிறந்ததும்⋆
வீங்கிருள்வாய்
பூண்டு⋆ அன்றன்னை புலம்பப் போய்⋆ அங்கோர்
ஆய்க்குலம் புக்கதும்⋆
காண்டல் இன்றி வளர்ந்து⋆ கஞ்சனைத் துஞ்ச
வஞ்சம் செய்ததும்⋆
ஈண்டு நான் அலற்றப் பெற்றேன்⋆
எனக்கென்ன இகல் உளதே (5)

www.prapatti.com

இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்⋆ இமில் ஏறுகள் செற்றதுவும்⋆
உயர் கொள் சோலைக் குருந்தொசித்ததும்⋆ உட்பட மற்றும் பல⋆
அகல் கொள் வையம் அளந்த மாயன்⋆ என் அப்பன் தன் மாயங்களே⋆
பகல் இராப் பரவப் பெற்றேன்⋆ எனக்கென்ன மனப் பரிப்பே (6)

மனப் பரிப்போடு⋆ அழுக்கு மானிட சாதியில் தான் பிறந்து⋆
தனக்கு வேண்டுருக் கொண்டு⋆ தான் தன சீற்றத்தினை முடிக்கும்⋆
புனத் துழாய் முடி மாலை மார்பன்⋆ என் அப்பன் தன் மாயங்களே⋆
நினைக்கும் நெஞ்சுடையேன்⋆ எனக்கினி யார் நிகர் நீணிலத்தே (7)

நீணிலத்தொடு வான் வியப்ப⋆ நிறை பெரும் போர்கள் செய்து⋆
வாணன் ஆயிரம் தோள் துணித்ததும்⋆ உட்பட மற்றும் பல⋆
மாணியாய் நிலம் கொண்ட மாயன்⋆ என் அப்பந் தன் மாயங்களே⋆
காணும் நெஞ்சுடையேன்⋆ எனக்கினி என்ன கலக்கம் உண்டே (8)

கலக்க ஏழ் கடல் ஏழ் மலை⋆ உலகேழும் கழியக் கடாய்⋆
உலக்கத் தேர்கொடு சென்ற மாயமும்⋆ உட்பட மற்றும் பல⋆
வலக்கை ஆழி இடக்கை சங்கம்⋆ இவையுடை மால் வண்ணனை⋆
மலக்கு நாவுடையேற்கு⋆ மாறுளதோ இம் மண்ணின் மிசையே (9)

மண்மிசைப் பெரும் பாரம் நீங்க⋆ ஓர்
பாரத மா பெரும் போர்
பண்ணி⋆ மாயங்கள் செய்து⋆ சேனையைப் பாழ் பட
நூற்றிட்டுப் போய்⋆
விண்மிசைத் தன தாமமே புக⋆ மேவிய
சோதி தன் தாள்⋆
நண்ணி நான் வணங்கப்பெற்றென்⋆
எனக்கார் பிறர் நாயகரே (10)

‡நாயகன் முழுவேழ் உலகுக்குமாய்⋆ முழுவேழ் உலகும்⋆ தன்
வாயகம் புக வைத்துமிழ்ந்தவையாய்⋆ அவை அல்லனுமாம்⋆
கேசவன் அடி இணைமிசைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
தூய ஆயிரத்திப்பத்தால்⋆ பத்தர் ஆவர் துவள் இன்றியே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com